**03.11.2022**

**OS.No. 89/2013 PW : 3, திரு. அனந்த ராமகிருஷ்ணன்**

**11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

1ம் வாதி என் தாயார். அனைத்து வாதிகள் சார்பாகவும் வாசா1 சாட்சியம் அளித்துள்ளார். 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணத்தின் அடிப்படையில் தான் சா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது. என் தாயார் மற்றும் அவரது சகோதரிகள் கிரையம் கொடுத்த மனை எண்1, ஏ அட்டவனை சொத்தில் இருக்கிறது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை நாங்கள் அளந்து கல் நட்டினோம். அதை நகராட்சியினர் அப்புறப்படுத்தி விட்டார்கள். அதை காட்டுவதற்கு தான் செய்திதாளை தாக்கல் செய்துள்ளோம். அந்த செய்தி தாளில் உள்ள புகைப்படத்தை வைத்து தாவா சொத்தை கண்டறியமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அந்த புகைப்படத்தில் தாவா சொத்தில் உள்ள வீடுகள், மரங்கள் இருக்கிறது. 2015ல் நான் கல் போட்டேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. சர்வேயரை வைத்து நாங்கள் அளக்கவில்லை. நாங்களே அளந்து கல் நட்டோம். செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று கூறி ஆட்சேபனை தெரிவித்து நகராட்சிக்கு நான் மனு கொடுக்கவில்லை. சாசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று இவ்வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் மொத்தமாக தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் நானும் என் சகோதரியான மரகதவள்ளியும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு வருகிறோம். வழக்கை தாக்கல் செய்ய தேவையான ஆவணங்களை நான் தான்

வாங்கி கொடுத்தேன். வழக்கை தாக்கல் செய்ய நானும், வாசா1 தான் வழக்கறிஞருக்கு விவரம் கூறினோமா என்று கேட்டால் என் தாயாரும், அவரது சகோதரிகளும் சொன்னார்கள். 3ம் வாதியை வாசா2ஆக குறுக்கு விசாரணை செய்தபோது நானும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன். அவருடைய குறுக்கு விசாரணையில் உள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் எந்தவிதமான மோசடி என்று எங்களால் உறுதியாக தெரிந்தகொள்ள முடியவில்லை என்று சொல்லியிருக்கும் விவரம் உண்மை தான். பாகப்பிரிவினை ஆவணத்தின் படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொண்டு தற்போது பாக ஆவணத்தை நாங்கள் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிகளுக்கு விருப்பம் இலலை என்றும் நானும், வாசா1 தான் இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிகளை தூண்டிவிட்டோம் என்றால் சரியல்ல. என் தாயார் ஏற்கனவே விற்ற நிலம் மற்றும் சாசாஆ1ல் உள்ள இடம் ஆகியவற்றை கழிக்காமல் மொத்த நிலத்திற்கும் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தாயாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

<u>**13ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**</u>

இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை. என் தாயார் ஒரு வாதி ஆவார். சாசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்திற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

பாகப்பிரிவினை ஆணவத்தில் பிரச்சனை இருக்கிறது என்று கூறி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். சர்வேஎண் 503/2, 804, 805 ஆகிய சர்வே எண்கள் மற்றும் ஒரு வீட்டை பொறுத்து பாகம் ஏற்படவில்லை. சர்வே எண் 503/3பி பொறுத்து பாகம் செய்தார்கள். அது தான் பிரச்சனை. அது என்ன பிரச்சனை என்று கேட்டால் எங்களுக்கு கொடுத்த பாகத்தில் நாங்கள் வீடுகட்ட முடியவில்லை அதில் நகராட்சி பிரச்சனை செய்கிறது. நகராட்சி எந்த அடிப்படையில் பிரச்சனை செய்கிறது என்று கேட்டால் அது நகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இடம் என்று பிரச்சனை செய்கிறார்கள். நகராட்சி இவ்வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதா என்று நான் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி நகராட்சிக்கு தானம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அதில் பங்கு கோரவில்லை. முதல் விசாரணையில் பூங்காவிற்கு கொடுத்த இடம் போக மீதியுள்ள சொத்தை பாகம் பிரிக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் டி.டீ.சி.பி. விதிகளின் படி எவ்வளவு இடம் கொடுக்கவேண்டுமோ அதை கொடுத்துவிட்டு மீதி இடத்தை பாகம் செய்ய வேண்டும். தாவா சொத்தில் குப்பை தொட்டியை கட்டியிருக்கிறார்கள். பொதுமக்களின் உபயோகத்திற்காக நகராட்சி இடத்தை எடுத்திருக்கிறது என்று சொன்னால் அதை ஓரமாக எடுத்திருக்க வேண்டும். நடுவில் உள்ள சொத்தை எடுத்திருக்க கூடாது. கூட்டுகுடும்பமாக இருக்கும்போது தான் வாதிகளும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் நகராட்சிக்கு தானமாக கொடுத்தார்கள் என்றால்

சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வாரிசுகளிடமிருந்து தான் வாதிகள் பரிகாரத்தை கேட்க வேண்டும் என்றும் நகராட்சியிடம் பரிகாரம் கேட்டமுடியாது என்றால் சரியல்ல. நகராட்சிக்கு தானமாக கொடுத்த இடத்தை நாங்கள் மீண்டும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. பொது உபயோகத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>3, 7, 8 பிரதிவாதிகள் தரப்பல் குறுக்கு விசாரணை...</u>**

1ம் வாதிக்கு தற்போது வயது சுமார் 83, 84 வயதிருக்கும். நான் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்திருப்பது கூட 1ம் வாதிக்கு தெரியும். வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்னர் 1ம் பிரதிவாதிக்கு வாதிகள் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார்கள். அந்த விவரம் எனக்கு தெரியும். சா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிய பின்னர் தான் வாதிகள் வா.சா.ஆ.5 அறிவிப்பை அனுப்பினார்கள். சாசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்தை வாசாஆ5 அறிவிப்பிலும், பிராதிலும் சொல்லவில்லை. பட்டா மாற்றும்போது நாங்கள் விண்ணப்பம செய்ததாக நான் சொல்லியிருப்பதால் யார் பெயரில் பட்டா இருந்தது என்று கேட்டால் என் தாத்தா ராஜுபிள்ளை பெயரில் பட்டா இருந்தது. பாகப்பிரிவினை ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ள மனை எண்.2க்கு ராஜுபிள்ளை பெயரில் பாகப்பிரிவினை ஆவணம் எழுதியபோது பட்டா இருந்ததா என்று கேட்டால் மொத்த சொத்திற்கு ராஜுபிள்ளை பெயரில் பட்டா இருந்தது. பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்டு 11 வருடம் கழித்து

தான் சாசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்தை என் தாயார் எனக்கு எழுதி கொடுத்தார். 1991 முதல் 2011 வரை என் தாயார் பட்டா கேட்டு மனு எதுவும் கொடுக்கவில்லை. மனை எண்2ஐ பூங்காவாக மாற்றியதாக நகராட்சி எனக்கு எழுத்து மூலமாக ஆவணத்தை கொடுத்திருக்கிறதா என்று கேட்டால் கொடுத்திருக்கிறது. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு நிலுவையில் இருந்த போது சா.சா.ஆ.2 செய்திதாள் வந்தது. அதை எனக்கு தெரிந்த ஒருநபர் கொடுத்தார். மனை எண்2 பற்றிய செய்தி என்ற குறிப்பு சாசாஆ2ல் இல்லை. அதில் சர்வே எண்ணும், கிராமத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்திற்கும் சாசாஆ2க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை திசை திருப்புவதற்காக சாசாஆ2 செய்தித்தாளை கொண்டுவந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனை எண்2ஐ பூங்காவாக மாற்றிய விவரம் 2015ல் எனக்கு ஓரளவு தெரிந்தது. தற்போது தான் அது முழுமையாக தெரிகிறது. நகராட்சி பூங்காவாக மாற்றிய விவரத்தை நான் நம்புகிறேனா என்று கேட்டால் அதுவும் எனக்கு சரியாக தெரியவில்லை. சொத்து என் தாத்தாவின் சொத்து என்றும் அது பாகப்பரிவினை மூலம் என் தாயாருக்கு கிடைத்தது என் தாயார் மனை எண் 2ஐ எனக்கு செட்டில்மெண்ட் மூலம் கொடுத்திருப்பதால் அது பூங்கா கிடையாது என்று ஆட்சேபித்து நகராட்சிக்கு நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. நகராட்சிக்கு எதிராக நான் நடவடிக்கை எடுக்கவில்லை. செட்டில்மெண்ட்

ஆவணத்தை பற்றி பிராதில் சொல்ல வேண்டாம் என்று வாதிகளிடம் நான் சொல்லவில்லை. எங்கள் இடத்தை நகராட்சியோ அல்லது வேறு துறையோ எடுத்தால் எங்களுடைய சொத்தை நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும் என்றும் சொத்தை எழுதி கொடுத்தவர்களை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் தாயார் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வரமுடியாத அளவிற்கு உடல்நிலை இருந்தாலும் அவர் சாட்சி சொல்லும் அளவிற்கு நல்ல மனநிலையில் இருக்கிறார் என்றாலும் அவரது சாட்சியத்தை நீதிமன்றத்திலிருந்து மறைக்கிறோம் என்றால் சரியல்ல. சொத்தை ஏற்கனவே பாகம் செய்து 1ம் பிரதிவாதிக்கு சொத்தை கொடுத்த பின்னர் சொத்துக்களை மீண்டும் பாகம் செய்ய வாதிகள் கோரமுடியாது என்றால் சரியல்ல. பாகம் பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை 1ம் பிரதிவாதியோ அவரது வாரிசுகளோ விற்கவில்லை. பாகம் பிரியாத சொத்துக்களை தான் அவர் விற்றிருக்கிறார். 9 முதல் 12 பிரதிவாதிகள் சொத்தை 1ம் பிரதிவாதியிடமும் அவரது வாரிசுகளிடமும் சொத்தை வாங்கியவர்கள் ஆவார்கள். என்னை பொறுத்தவரையில் 9 முதல்12 பிரதிவாதிகள் வாங்கிய சொத்துக்கள் 1991 வருடத்திய பாக ஆவணத்தில் இல்லை. சாட்சி சொல்ல என்னை யாரும் அழைக்கவில்லை. நானாக தான் சாட்சி சொல்ல வந்தேன். நானும், வாசா1ம் இவ்வழக்கின் ஒவ்வொரு வாய்தாபற்றி என் தாயாரிடம் சொல்வோம். சாசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டும் வாதியும், 1ம் பிரதிவாதிகளும் சேர்ந்து கிரையம் கொடுத்த

சொத்துக்களை கழித்து விட்டு மீதியுள்ள சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று என் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை பிராதிலோ அல்லது வாசா1 மற்றும் வாசா2 சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தரப்பினராக இல்லாத சூழ்நிலையில் என் முதல் விசாரணை மூலம் புதிதாக ஒரு வழக்கை முன் வைத்திருப்பது செல்லாது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதிய பின்னர் அதை ஊர்ஜிதப்படுத்தும் விதமாக எனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்துவிட்டு என் தாயார் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**14 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது.**

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.